இலங்கை திறந்த பல்கலைக்கழகம் 056

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

மட்டம் - 05

**SNU5242/ESU3242 – உள்ளடங்கற் கல்வி**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 26.01.2025 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. 1980 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பின் (WHO) படி ஊனப்படுத்தப்பட்டோர் அல்லது சாதிக்க முடியாதோர் (Handicapped) என்ற எண்ணக்கருவைச் சுருக்கமாக விளக்குக.
2. உள்ளடங்கற் கல்வியின் நான்கு (04) கொள்கைகளைக் குறிப்பிடுக.
3. டவுன் சிண்ட்ரோம் (Down Syndrome) உள்ள மாணவர்களின் ஐந்து (05) குணாம்சங்களைக் குறிப்பிடுக.
4. ஓட்டிசத் திருசிய நிலை (ASD) உள்ள பிள்ளைகளை முன்கூட்டியே அடையாளம் காண்பதற்கு அவர்களிடம் அவாதானிக்கக் கூடிய ஐந்து (05) அறிகுறிகளைப் பட்டியலிடுக.
5. உள்ளடங்கல் வகுப்பறையில் பல்வகைப்பட்ட கற்போர் (Diverse Learners) என்ற எண்ணக்கருவைச் சுருக்கமாக விளக்குக.
6. இலங்கையில் இயலாமைகள் (Disabilities) உள்ள மாணவர்களின் கற்றற் தேவைகளை உள்ளடங்கற் கல்வி விலாசப்படுத்தும் மூன்று (03) வழிகளை விளக்குக.
7. இலங்கையில் உள்ளடங்கற் கல்வியைச் செயற்படுத்துவதில் கல்வியாளர்கள் எதிர்கொள்ளும் ஐந்து (05) சவால்களைக் குறிப்பிடுக.
8. உள்ளடங்கல் வகுப்பறையில் கற்பித்தல் கற்றல் செயல்முறையின் போது மாணவர்களின் விசேட கல்வித் தேவைகளை (SEN) அடிப்படையாகக் கொண்டு நீங்கள் முன்னெடுக்கும் இரண்டு (02) தழுவல்களை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. i. டவுன்ஸ் சிண்ட்ரோம் அல்லது பெருமூளை வாதம் (CP) உள்ள மாணவரகளின் தனித்துவமான கற்றற் பாணியை விலாசப்படுத்திப் பயன்படுத்தக்கூடிய பொருத்தமான கற்பித்தல் முறைகளைக் குறிப்பிடுக.

**(06 புள்ளிகள்)**

ii. சமூகத் தொடர்புகளை ஏற்றுக்கொள்ளும் உள்ளடங்கல் வகுப்பறைச் சூழல்களை ஆசிரயர்கள் எவ்வாறு உருவாக்க முடியும் என்பதை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

iii. சாதாரண கல்வி வகுப்பறையில் டவுன்ஸ் சிண்ட்ரோம் மற்றும் பெருமூளை வாதம் உள்ள மாணவர்களுக்கு உள்ளடங்கற் கல்வியின் உத்திகளின் பயன்பாட்டின் சவால்கள் மற்றும் நன்மைகளைப் பகுப்பாய்வு செய்க.

**(08 புள்ளிகள்)**

**10. i.** உள்ளடங்கல் வகுப்பறையில் பார்வைக் குறைபாடுள்ள மாணவர்களை அடையாளம் காண ஆசிரியர்களால் முன்னெடுக்கப்படும் செயற்பாட்டு மதிப்பீடுகளின் போது கருத்திற்கொள்ள வேண்டிய **ஐந்து** (05) காரணிகளைக் குறிப்பிடுக

**(06 புள்ளிகள்)**

**ii.** உள்ளடங்கல் வகுப்பறையில் பார்வைக் குறைபாடுள்ள மாணவர்களுக்கு உதவக்கூடிய குறைந்தது **மூன்று** (03) கற்பித்தல் உத்திகளைக் கண்டறிந்து விவரிக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** உள்ளடங்கல் வகுப்பறைகளில் பார்வைக் குறைபாடுள்ள மாணவர்கள் எதிர்கொள்ளக்கூடிய சமூகம் சார் சவால்களை ஆராய்ந்து, பார்வைக் குறைபாடுள்ள மாணவர்களின் மனவெழுச்சி சார் நல்வாழ்வை மேம்படுத்த **இரண்டு** (02) உத்திகளைக் குறிப்பிடுக.

**(08 புள்ளிகள்)**

**11. i.** "பேச்சு" மற்றும் "மொழி" ஆகிய பதங்களை விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** **மூன்று** (03) பொதுவான மொழி சார் ஒழுங்கீனங்களைக் குறிப்பிட்டு அவற்றில் **ஒன்றை** (01) விவரிக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** உள்ளடங்கல் வகுப்பறைகளில் பணிபுரியும் ஆசிரியராக, பேச்சு ஒழுங்கீனங்கள் உள்ள மாணவர்களுக்குப் பயன்படுத்தக்கூடிய **ஐந்து** (05) வகுப்பறை சார் தழுவல்களை ஆராய்க.

**(10 புள்ளிகள்)**

**12. i.** ஜெசெடெய்க் (Ysseldyke) மற்றும் அலோபோஸ்சைன் (Alogozzine) (1998) அடிப்படையில், கற்றல் இயலாமைகள் உள்ள மாணவர்களை **ஐந்து** (05) குழுக்களில் அடக்கலாம். மேலே உள்ள **ஐந்து** (05) குழுக்களைக் குறிப்பிட்டு அவற்றில் **இரண்டை** (02) விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**ii.** கற்றல் இயலாமைகளின் **ஐந்து** (05) ஆரம்ப அறிகுறிகளைக் கண்டறிந்து அவற்றைச் சுருக்கமாக ஆராய்க.

**(06 புள்ளிகள்)**

**iii.** உள்ளடங்கல் வகுப்பறையில் கற்றல் இயலாமைகள் உள்ள மாணவர்களுக்குச் செயற்படுத்தக்கூடிய **ஐந்து** (05) பொதுவான தலையீட்டு முறைகளை ஆராய்ந்து அவற்றை நியாயப்படுத்துக.

**(08 புள்ளிகள்)**

**13.** "பல நாடுகளில் மீத்திறனுள்ள மற்றும் ஆற்றல் மிகு (Gifted and Talented) குழந்தைகள் ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளைப் பின்பற்றி அடையாளம் காணப்படுகிறார்கள்"

**i.** மீத்திறனுள்ள மற்றும் ஆற்றல்மிகு மாணவர்களை அடையாளம் காணப் பயன்படுத்தக் கூடிய **ஐந்து** (05) அடிப்படை முறைகளைக் குறிப்பிடுக.

**(06 புள்ளிகள்)**

**ii.** பெற்றோர்களும் ஆசிரியர்களும் இந்த மாணவர்களைச் சில பொதுவான அம்சங்களின் அடிப்படையில் அடையாளம் காணலாம், **மூன்று** (03) பொதுவான அம்சங்களை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** மீத்திறனுள்ள மற்றும் ஆற்றல்மிகு மாணவர்கள் கல்வி மற்றும் சமூக விருத்தியில் அவர்களால் எதிர்கொள்ளப்படும் சவால்களின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்க.

**(08 புள்ளிகள்)**

**14. i.** கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2022.09.08 எனத் தேதியிடப்பட்ட விசேட மதிப்பீட்டிற்கான சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டுதல் கையேடு 33/2022 ஆகியனவற்றின் **மூன்று** (03) முக்கிய அம்சங்களை விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** விசேட கல்விக்கான வலயமட்ட மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களைக் குறிப்பிட்டு, கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட விசேட கல்வி மதிப்பீட்டிற்கான வழிகாட்டுதல் கையேட்டின் படி விசேட கல்வி மதிப்பீட்டில் பின்பற்ற வேண்டிய **இரண்டு** (02) விடயங்களைப் பற்றி ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

**iii.** இலங்கையில் வெற்றிகரமான உள்ளடங்கற் கல்வி நடைமுறைகளை உறுதிப்படுத்த ஆசிரியர்களுக்கு பரிந்துரைக்கக்கூடிய பயிற்சி மற்றும் தொழில் மேம்பாட்டு வாய்ப்புக்களை பரிந்துரை செய்க.

**(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -



81